பதிவஞ்சல்

31 OCT 2023

தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு.ந.க.நல்லமுத்துராஜா, பி.எஸ்சி (விவ) எம்.பி.ஏ.,

செ.மு.ஆ.ந.க.எண் ஆ2/2847/2016, நாள்: 26.10.2023.

பொருள்: பணயமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி திரு.பி.சிவக்குமாரன் அவர்கள் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்(பிணையம்)–ஆக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது – தொடர்பாக.

பார்வை:

1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணை எண்: அநிபி6/127787/2020, நாள்.21.12.2021.
2. அரசாணை(3டி)எண்: 131 வேளாண்மை உழவர் நலத்(வே.நி.9)துறை, நாள்: 14.08.2023.
3. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களது கடித எண்: அநிபி8/55246/2022, நாள்:29.09.2023.

******

ஆணை:

பார்வை 1–இல் காணும் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்(பிணையம்)–ஆக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.பி.சிவக்குமாரன் அவர்களின் பதவியினை பார்வை 2–இல் கண்ட அரசாணையின்படி இளநிலை உதவியாளர்(பிணையம்)–ஆக பணியில் சேர்ந்த நாளான 13.01.2022 மு.ப முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து இவரை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில்வைத்து ஆணையிடப்படுகிறது.

மேலும், இப்பணியாளர் பவானிசாகர் அரசுஅலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து தகுதிகாண் பருவத்தினை நிறைவுசெய்த பின்னரே இவர் இரண்டாம் மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதி உடையவராகிறார் என உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு: பார்வை 2–இல் கண்ட அரசாணை.

ஒம்/– ந.க.நல்லமுத்துராஜா,
வேளாண்மை இணை இயக்குநர்,
தஞ்சாவூர்.

பெறுநர்:

திரு.பி.சிவக்குமாரன்,
இளநிலை உதவியாளர்(பி),
வேளாண்மை விரிவாக்கமையம் மெலட்டூர்,
வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் – அம்மாபேட்டை.

வழி மற்றும் நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், அம்மாபேட்டை.

நகல். "அ2" பிரிவு இவ்வலுவலகம். பணிப்பதிவேட்டில் பதிந்து விவரம் தெரிவித்திடும் பொருட்டு.

நகல். இருப்புகோப்பு.

//உத்தரவுப்படி//

ஆட்சி அலுவலர்.

## சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.பி.சிவகுமாரன் என்பவரின் பணியினை 13.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, ஆடி மாதம் 29-ம் நாள்

அரசாணை (3டி) எண்.131 நாள்:14.08.2023

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 55246 / 2022, நாள் 03.11.2022.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் கும்பகோணம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் காவலராகப் பணியாற்றி வந்த போது பணிக்காலத்தில் மரணமடைந்த அமரர் சு.பிச்சுராமன் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு.பி.சிவகுமாரன் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அநிபி6 / 127787 / 2020, நாள் 21.12.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்து, தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். அ2 / 114 / 2022, நாள் 11.01.2022-ன்படி, தனியர், தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில், அம்மாப்பேட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் மெலட்டூர், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளராக (பிணையம்) 13.01.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 13.01.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.பி.சிவகுமாரன் என்பவரின் பணியினை 13.01.2022 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ. சா. எண்.1499/2023, நாள்.09.03.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண். 1499/2023, நாள்.15.05.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
திரு.பி.சிவகுமாரன், இளநிலை உதவியாளர், (பிணையம்)
வழி: வேளாண்மை ஆணையர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.1499 / வேநி9 / 2023
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16/08/23
பிரிவு அலுவலர்

16/8/23